# வாட்ஸாப் வேதனை

வீடியோ எல்லாம் போடாதே!
வேலையத்தான் கெடுக்காதே!
டேட்டா எல்லாம் கரையுது!

போட்டோ மட்டும் என்னவாம்,
பொழைப்பைத் தானே கெடுக்குது!
குடும்பக் கதை பேசுங்க!
பழையகதை பேசுங்க!

படமிருந்தா பகிருங்க!
நாளும் குப்பையைத்தான் கொட்டினா,
கொள்ளை போகும் நேரமே!
அழிச்சு அழிச்சு வெரலுந்தான்
ஆற்றாமையால் வேகுது!
நல்ல செய்தி சிலவுமே,

படிக்காமலே அழியுது!
ஒரு குழுவில் பகிர்ந்தாலே
ஊருக்கெல்லாம் தெரியுமே!

தனியே வேறே அனுப்பி வெச்சா,
தட்டமாலை சுத்துது!

எல்லோருமே மாறுங்க!
இதய கருத்தை பகிருங்க!
மேலே மேலே அனுப்பினா,
மூச்சு முட்டி போகுது!
பாட்டியான பாப்பா கூட
காணாமலே போகுது!
சின்ன வயசு கதையெல்லாம்
சிந்திச்சு எழுதுங்க!

பங்கெடுத்த மக்களோட,
படிப்பவங்களும் மகிழ்வாங்க!
எழுத்தாளர் யாவரும்
உங்க குள்ளேயும் இருக்காங்க!
தேவையில்லா பதிவுகளை,
திருப்பி திருப்பி அனுப்பாம
எழுதித்தானே பாருங்க!
இதயம் சிலிர்த்து போகுங்க!

- கவிஞர் கவிவளவன் (C) 04-11-2017

# மீன் பதிவுகள்

நேமமுறச் செய்வதுபோல்,
நிதமும் சிலப் பதிவுகளைத்
தாமாக அனுப்பி வைப்பர்;
தானுமே அதைப் படிக்காமல்!
நாமுமே படிப்போமென்று,
நலிந்தார் சிலர் படிப்பர்!
சேமமாய்ச் சில நிற்கும்,
சிந்தையைத் தூண்டிவிடும்!

வேதனையை நீக்கி விடும்,
விவவேகச் சொற்களுண்டு!
வாதையைத் தான் தருமே,
வந்தவையே மீண்டும் வந்து!
வேதமோ தத்துவமோ அவை
விரும்பிக் கொள்வதற்கு?
தீதறு வணிக உத்தியென்று,
தெளிவுடனே அறிந்தோமோ!

நல்லவையை நாம் பகிர,
நலமுடனே செய்தி சொல்ல,
தொல்லையில் ஓர் கலனாம்,
தொடர்ந்து பயன் கொள்வீர்!
அல்லவை நீக்கி வைத்தால்,
அழகாய்த் தானி ருக்கும்!
எல்லையில் பயன் பாட்டில்,
யாவரும் சீர்மை கொள்வோம்!

- கவிவளவன் 22-04-2019 (7.05 AM)

## கைபேசி

மணி பத்தரை தாண்டி போச்சுதையா;
எத்துனை பேரின் கைகளிலே,
கணினி இன்னும் தழுவுது பார்!
கைபேசி காணும் விரலசைவில்,
காணும் செய்திகள் உருளுது பார்!
அக்கம் பக்கம் பேச்சில்லை!
அவனியில் எதற்கும் கவலையில்லை!
ஐயகோ இறைவா காப்பாற்று!
யானுமோர் அடிமையாய் ஆனேனோ!

கவிவளவன் (27-09-2015)